## அபிவிருத்தி லொத்தர் சபை – 2014

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அபிவிருத்தி லொத்தர் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01

(i) சபையின் பிரதான செயல்நடவடிக்கை லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்வதாக இருந்ததுடன் அதற்காக ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்களுக்காக ஏற்படும் செலவினம் மற்றும் பெறுமானத் தேய்வுகளின் கூட்டுத்தொகை ரூபா 19,463,884 நிர்வாகச் செலவினமாகக் கருதப்பட்டமையின் காரணமாக செலவின வகைப்படுத்தல் சரியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியான ரூபா 198,540,485 தொகை விற்பனை மற்றும் விநியோகச் செலவினமாக விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் அந்த வரித்தொகை விற்பனை வருமானத்தில் கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 36

சபையின் எதிர்பார்த்த பொருளாதார நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாத மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான தேறிய பெறுமதி ரூபா 30,013,677 தொகையான திரைப்படக்கூடம் தொடர்பான பெறுமதி குறைவுப் பரிசோதனை (Impairment Test) மேற்கொண்டு சொத்தின் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீட்டிழுப்பு தடவையொன்றுக்கென ஒதுக்கப்பட்ட எனினும் வெற்றியாளர்களுக்கு உரித்தற்ற ரூபா 100,168,320 தொகையான பரிசுப் பணம் மீளாய்வாண்டின் இலாபத்தில் சீராக்கி உரிமை மூலதன மாற்றக் கூற்றில் பரிசு ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாமல் பேரேட்டுக் கணக்குகளில் சீராக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் இலாபம் அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கணிப்பீட்டின் படி 2001 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை சபையினால் கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்பட்ட வருமான வரிகளின் பெறுமதி ரூபா 3,320,913,232 ஆக இருந்தது. சபையினால் அந்த கால எல்லைக்குரிய வருமான வரியாக ரூபா 284,896,813 தொகையான மதிப்பீட்டு அறிக்கையொன்று உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக 2015 மார்ச் 17 ஆந் திகதியிலும் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. எனினும் சபை இந்த நிலைமையை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்க வில்லை.

(இ) சபையினால் கட்டளையிடப்பட்டு 2008 ஆம் ஆண்டின் போது சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 8,095,000 பெறுமதியான டபள்கப் வாகனமொன்று முன்னாள் தலைவரினால் வழங்கல் கம்பனியிலிருந்து கையேற்கப்பட்டிருந்ததுடன் அந்த டபள்கப் வாகனம் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வின் போது பௌதீக இருப்பை உறுதிப்படுத்தப்படாத அந்த வாகனத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டு உரிய பெறுமதி தனியார் நிறுவனமொன்றிற்குச் செலுத்த வேண்டிய பொறுப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் தலைமை அலுவலகத்திற்காக கட்டிடமொன்றை வாடகை அடிப்படையில் பெறுவதற்காக 2003 நவம்பர் 01 ஆந் திகதி சபையினால் வணிக அமைச்சிற்கு ரூபா 8,685,360 தொகை வாடகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் சபை அந்தக் கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெறுவதில்லை எனத் தீர்மானித்தமையால் வாடகை முற்பணமாகச் செலுத்தப்பட்ட தொகையில் ரூபா 2,985,360 தொகை மாத்திரம் சபைக்கு மீளக் கிடைத்திருந்ததுடன் மேலும் அறவிடவேண்டிய ரூபா 5,700,000 தொகை இது வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்தப் பணத்தை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடையாத வெளிநபர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 2,520,000 தொகை பெறவேண்டிய மீதியாகும்.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டம் | |
| (i) 18(3) ஆம் பிரிவு | பரிசு ஒதுக்கக் கணக்கின் மீதி புதிதாக லொத்தர் சீட்டுக்களை அறிமுகப்படுத்தும் போதும் வெற்றியினை பெற்றுக்கொள்வதற்காக பணம் போதியளவில் காணப்படாத போது மாத்திரம் பயன்படுத்த முடியுமான போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் |

உரியவாறு பரிசு ஒதுக்கக் கணக்கில் பேணப்பட்ட ரூபா 874,670,557 தொகையான மீதியில் ரூபா 405,000,000 தொகை பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின்படி சபையின் அலுவலகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடத்தை கைப்பற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படி பாவனைக்காக ரூபா 469,670,557 தொகை மாத்திரம் பரிசு ஒதுக்க கணக்கிற்குரியதாக சபை வசம் காணப்பட்டது.

(ii) 19(1), (2) மற்றும் (3) ஆம் பிரிவுகள்

பிரிவுகளின் படி லொத்தர் சம்பந்தமான விதிகளைத் தயாரித்து விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று வர்த்தமானியில் பிரசுரிக்காமல் அந்தந்தச் சந்தர்ப்பங்களில் எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின்படி முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் சுரண்டும் லொத்தர் மற்றும் சீட்டிழுப்பில் வெற்றியாளர்களைத் தெரிவு செய்யும் லொத்தர் நடாத்தப்பட்டு ரூபா 9,728,586,929 விற்பனை வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன் அந்த வருமானத்தில் ரூபா 6,211,302,790 தொகை பரிசுக்காக ஒதுக்கப்பட்டு ரூபா 2,063,639,652 தொகை விற்பனை முகவர்களுக்கு தரகினை வழங்குவதற்கும் சபையினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 11.5.1 ஆம் பிரிவு

பிரிவிற்கு இணங்காமல் ஊழியர் ஆதனக் கடன் வட்டியில் 50 சதவீதம் சபையினால் செலவிடுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்ததுடன், அதன்படி கணிப்பிடப்பட்டு உத்தியோகத்தர்களின் ஆதனக் கடன் வட்டியாக மீளாய்வாண்டின் போது ரூபா 5,836,164 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

(i) 6.5.1 ஆம் பிரிவு

மீளாய்வாண்டிற்குரிய சபையின் ஆண்டறிக்கையின் வரைவொன்று நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 8.3.5 (ஆ) ஆம் பிரிவு

பிரிவின்படி, நிதியேற்பாடு இன்றி சபையின் 05 உதவி பொது முகாமையாளர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டு ரூபா 1,248,390 தொகையான எரிபொருள் செலவினம் மீளாய்வாண்டின் போது மீளளிக்கப்பட்டிருந்தது.

(iii) 9.7 மற்றும் 9.12 ஆம் பிரிவுகள்

திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் சபையினால் மீளாய்வாண்டின் போது ஊழியர்களுக்காக ரூபா 25,141,298 தொகையான வைத்திய உதவிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தப் பெறுமதியில் எவ்வித வைத்திய பட்டியல்

| | |
|---|---|
| | பெற்றுக்கொள்ளப்படாமல் பணமாகச் செலுத்தப்பட்ட பெறுமதி ரூபா 9,225,519 ஆகும். |
| (ஈ) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ – 57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2, 6(iii) மற்றும் 6(iv) ஆம் பிரிவுகள் | சபை மீளாய்வாண்டில் விற்பனை விளம்பரத்திற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 434,846,000 தொகை அங்கீகரிக்கப்பட்டு விற்பனை விளம்பரத்திற்காக ரூபா 306,981,876 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி வருடாந்த விளம்பர நிகழ்ச்சித்திட்டங்கள், பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அரசாங்கத்தினால் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற ரூபா 100,000 இனை விஞ்சிய அனுசரணைக்காகவும் எந்தவொரு தரப்பினருக்கும் வழங்கப்பட்ட ரூபா 02 மில்லியனை விஞ்சிய அனுசரணைக்காகவும் நிதி திட்டமிடல் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 2,353,246,339 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,126,438,341 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 226,807,998 தொகை அதாவது 10.6 சதவீதம் அதிகரித்திருந்தது. லொத்தர் வருமானம், சீட்டிழுப்புச் செலவினம், நிர்வாகச் செலவினம், நிதிச் செலவினம் மற்றும் வருமான வரி போன்ற விடயங்களின் பாதகமான முரண் ரூபா 246,758,679 ஆக இருந்த போதிலும் சீட்டொன்றின் கிரயம், பரிசுக்கான ஒதுக்கம், ஏனைய வருமானம், விநியோகச் செலவுகள் மற்றும் பரிசுகளை மீளக் கையளித்தல் போன்ற விடயங்களின் சாதகமான முரண்கள் ரூபா 473,566,677 ஆக இருந்தமை அந்த முன்னேற்றத்திற்கு தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் லொத்தர் விற்பனை வருமானம் ரூபா 212,788,222 இனால் அதாவது 2.1 சதவீதத்தினால் குறைவடைந்திருந்த போதிலும் விற்பனைக் கிரயம் ரூபா 284,492,622 இனால் அதாவது 3.9 சதவீதத்தினால் குறைவடைந்தமை மொத்த இலாப விகிதிம் 28 சதவீதம் முதல் 29 சதவீதம் வரை உயர்வடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தது.

(ஆ) ஏனைய வருமானம் ரூபா 8,188,886 இனாலும் வெல்லப்படாத பரிசுகளை மீளக் கையேற்றல் ரூபா 62,004,480 இனாலும் உயர்வடைந்தமையும் லொத்தர் விநியோகச் செலவினம் ரூபா 93,853,621 இனால் குறைவடைந்தமையும் தேறிய இலாபம் 21 சதவீதம் முதல் 24 சதவீதம் வரை அதிகரித்தமைக்கு தாக்கமளித்திருந்தது.

(இ) சபையின் நடைமுறைச் சொத்துக்களை விஞ்சி நடைமுறைப் பொறுப்புக்கள் காணப்படுவதுடன் நடைமுறை மற்றும் விரைவு விகிதங்கள் நியம மட்டத்தில் காணப்படவில்லை. மீளாய்வாண்டின் போதும் தொழிற்படு மூலதன முகாமைத்துவம் தொடர்பில் சபை கவனம் செலுத்தாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 22,950,330 தொகையான

பணிக்கொடை ஒதுக்கீடுகளில் ரூபா 12,274,776 தொகை மாத்திரம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டதன் மூலம் அது மேலும் உறுதியாகியது.

### 3.3 சபைக்கு எதிராக அல்லது சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்தல் தொடர்பாக தனியார் கம்பனியொன்றினால் ரூபா 8,095,000 தொகையான நட்டஈடு கோரி சபைக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் ரூபா 2,520,000 தொகையான கட்டிட வாடகைப் பணத்தை அறவிடுவதற்காக சபையினால் வெளிநபரொருவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை சபையினால் செலுத்த வேண்டியதாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 3,540 மில்லியனுக்கு மேற்பட்ட நிலுவை வருமான வரி, பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் பெறுமதி சேர் வரி போன்றவை தொடர்பான பிணக்குகளைத் தீர்ப்பதற்கு சபை தவறியிருந்ததுடன் அந்த பிணக்குகளின் அடிப்படையில் மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 28 முதல் செப்தெம்பர் 05 வரை சபையின் சகல வங்கிக் கணக்குகளையும் தற்காலிகமாகக் கைவிடுவதற்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த நிலுவை வரி பிணக்குகளைத் தீர்ப்பதற்காக ரூபா 4,825,000 தொகையான ஒப்பந்தக் கட்டணத்தின் கீழ் வரி மதியுரையாளர்களின் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கும் சபை தீர்மானம் எடுத்து மீளாய்வாண்டின் போது வரி மதியுரையாளருக்கு ரூபா 2,485,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வரி மதியுரையாளரின் கணிப்பீட்டின்படி சபையினால் நிலுவை வருமான வரியாக ரூபா 284,896,813 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் பிணக்குகள் தீர்க்கப்பட்டிராததுடன் தண்டப்பணம் நீக்கப்பட்டதன் பின்னர் ரூபா 1,807 தொகையான மிகுதி நிலுவை வரிப் பணம் சமமான 83 தவணைகளில் செலுத்துவதற்கு 2015 ஆம் ஆண்டின் போது சபை இணங்கியிருந்தது.

(ஆ) 2009 நவம்பர் 17 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ1/04/4/015 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 30 ஆவது ஏற்பாடுகளை அமுல்படுத்தும் கடிதத்தின் படி விற்பனை மதியுரையாளர் பதவியை ஏற்பவருக்கு மாத்திரம் வரையறுக்கும் வகையில் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர் சேவையிலிருந்து விலகிச் செல்வதுடன் அப்பதவி வலுவிழக்கச் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2013 யூலை மாதம் 01 ஆந் திகதி விற்பனை மதியுரையாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்டையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார். ஆந்த உத்தியோகத்தருக்கு 2013 யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2015 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை ரூபா 1,710,000 தொகையான படியொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்தப் பதவியைத் தோற்றுவித்ததால் சபை எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) உடனடி லொத்தர் சீட்டுக்களை அச்சிடுதல் தொடர்பாக ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி கூடிய தரத்தைச் கொண்டதும் சரியானதுமான லொத்தர் சீட்டுக்களை வழங்க வேண்டிய போதிலும் ஒப்பந்தக்காரரினால் முன்னைய ஆண்டைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் அதன்படி நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் ரூபா 3,135,000 பெறுமதியான 3,000,000 சீட்டுக்களை சுரண்ட இயலாதிருந்துடன் சபையினால் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.11.4(அ) மற்றும் (ஆ) இன்படி

ஒப்பந்தக்காரர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் உடனடி லொத்தர் விற்பனை வருமானம் ரூபா 153,204,680 இனால் அதாவது 37 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. விற்பனை முகவர்களின் முறைப்பாடுகளின்படி உரிய தரத்தைக் கொண்ட சீட்டுக்கள் காணப்படாமை இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது.

**4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது சபையினால் வாரந்தோறும் சீட்டிழுக்கப்படுகின்ற ‘‘சுபர் போல்’’ (Super Ball) லொத்தர் சீட்டுக்கள் விற்பனையிலிருந்து 40 சதவீதம் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவ்வாறு கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட சீட்டுக்களின் பெறுமதி ரூபா 951,792,000 ஆக இருந்தது. இந்தக் கடன் விற்பனை தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமோ அல்லது காப்புறுதியொன்றோ பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தியின் படி கொள்வனவு நிறுவனங்களின் பொறுப்பின் கீழ் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் சிபாரிசு பெற்றுக்கொள்ளப்படாமல் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக பகிர்ந்தளிப்பதற்கு சபையினால் 13 சந்தர்ப்பங்களின் போது ரூபா 5,332,700 கூட்டுத்தொகையான ரூபா 3,205,200 பெறுமதியான 6107 ரீ சேட்டுக்கள் மற்றும் ரூபா 2,127,500 பெறுமதியான 17,000 தொப்பிகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டில் ரீ சேர்ட் மற்றும் தொப்பிகளின் தேவைகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு ஒரே தடவையில் கொள்வனவு செய்யப்பட்டிருக்குமாயின் அதன் மூலம் பெறக்கூடியதாக இருந்த பொருண்மையான நலன்களையும் இந்த முறையற்ற கொள்வனவினால் சபை இழந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டில் சீட்டிழுப்பதற்காக அச்சிடப்பட்ட ரூபா 346,407,503 கிரயமான 706,891,400 சீட்டுக்களில் விற்பனை செய்யப்படாத 68,748,179 சீட்டுக்கள் இருந்ததுடன் அதன் கிரயம் ரூபா 33,689,595 ஆகும். அது மொத்த சீட்டுக்களின் கிரயத்தில் 9.7 சதவீதமாகும்.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான தெரிவு செய்தல் நடைமுறைமையொன்றும் இரு தரப்பினருக்குமிடையே உடன்படிக்கை கைச்சாத்திடாமலும் தனியார் இணையதளத்திற்கு சபையின் வியாபாரப் பெயர் மற்றும் உத்தியோகபூர்வச் சின்னம் (Trade name and Logo) காட்சிப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,200,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டின் போது தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக செலவிடுவதற்கு மாவட்ட செயலாளர்களுக்கு ரூபா 36,807,205 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அவை விற்பனை மற்றும் விநியோகச் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின்படி நடவடிக்கை எடுக்காமல் 03 நிறுவனங்களிலிருந்து கூறுவிலை கோரப்பட்டு சபையின் விளம்பரக் குழு தேர்வு செய்த நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட 5 நிமிட அறிக்கை நிகழ்ச்சித்திட்டம் அரசாங்க இலத்திரனியல் ஊடகம் மூலம் ஒளிப்பரப்பப்பட்டிருந்ததுடன் அதற்காக

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 13,958,000 தொகை மற்றும் ரூபா 16,540,000 வீதம் ரூபா 30,498,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது சபையின் செயற்பாட்டுப் பணிப்பாளரின் பாவனைக்காக கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படாது இரண்டு சந்தர்ப்பங்களின் போது வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனம் பெறப்பட்டு 2014 சனவரி முதல் யூலை வரையும் நவம்பர் முதல் திசெம்பர் மாதம் வரையும் ரூபா 1,111,060 தொகை வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் எந்தவொரு வழிகாட்டியையும் பின்பற்றாமல் விளம்பர நிறுவனத்தின் கோரிக்கையின்படி சபையின் விளம்பரக் குழுவின் சிபாரிசின் பிரகாரம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய உள்ளக மற்றும் வெளியகப் பகுதிகளில் 2014 யூன் 01 ஆந் திகதி முதல் ஒரு வருட கால எல்லையில் டிஜிடல் அறிவித்தல் பதாதை பொருத்தப்பட்டு லொத்தர் சீட்டுக்களின் விளம்பர நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்காக சபையினால் ரூபா 23,986,561 தொகையான மொத்தத் தொகையும் வழங்குனருக்கு ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி அறிவித்தல் விளம்பரமாக இருந்ததை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இலத்திரனியல் இயந்திர முறைமையொன்று விளம்பர நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் மூன்றாம் தரப்பினரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒளிப்பரப்பு மெய்மையாய்வு அறிக்கையொன்றைப் பெற்று (Transmision Reports) விளம்பரம் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.6.1 ஆம் பந்தியின்படி ஆரம்ப ஒப்பந்தம் வழங்கிய திகதி முதல் 06 மாதங்களை விஞ்சாதிருக்குமாயின் மாத்திரம் மீண்டுமொருமுறை அந்த அரசாங்க வழங்குனருக்குரிய பொருட்களை வழங்குவதற்கு முடியுமாக இருந்த போதிலும் ஆரம்ப ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு ஆறு மாதங்களைக் கடந்திருந்த போதும் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணாக கூறுவிலை கோரப்படாமல் மீளாய்வாண்டின் போது சபையினால் ரூபா 1,488,642 பெறுமதியான 138 துவிச்சக்கர வண்டிகள் மற்றும் ரூபா 333,380 பெறுமதியான 11 சக்கர நாற்கலிகள் என்பன முன்னைய ஒப்பந்தக்காரரிடமிருந்தே கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(எ) விற்பனை மேம்படுத்தல் செலவினத்தின் கீழ் அனுசரணையொன்றை வழங்கும் போது விடயங்களைத் தெரிவு செய்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட விடயங்களுக்காக செலுத்தப்படுகின்ற பணத்தை தீர்மானிக்கும் போது அனுசரணைகளிலிருந்து சபைக்கு கிடைக்கின்ற நலன்களை மதிப்பிடும் நடைமுறையொன்று சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் படி மீளாய்வாண்டில் அவ்வாறு முறையான அங்கீகாரமின்றி 07 அனுசரணையாளர்களுக்காக ரூபா 24,427,000 கூட்டுத்தொகையானது செலவிடப்பட்டிருந்ததுடன் அது ரூபா 2,000,000 இற்கும் ரூபா 5,355,000 இற்கும் இடையிலான வீச்சில் இருந்தது. மேலும் அனுசரணையாளர்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 9,331,800 தொகையான செலவினம் லொத்தர் விளம்பர உற்பத்திக் கட்டணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) சபையின் லொத்தர் சீட்டிழுப்பு கணனி முறைமையை அமுல்படுத்தும் சேவையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாது 2009 ஆம் ஆண்டின் போது வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு 2009 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 வரை ரூபா 71,348,976 தொகை செலுத்தப்பட்டிருந்தது. சபைக்கு ஒன்றிணைந்த தகவல் முறைமையொன்றை தாபிப்பதற்காக சபையினால் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்றி ஒப்பந்த அடிப்படையில் மதியுரையாளர் ஒருவர் சேர்க்கப்பட்டு 2012 திசெம்பர் முதல் 2015 பெப்ரவரி 28 வரை ரூபா 2,055,000 தொகையான படி செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஒன்றிணைந்த தகவல் முறைமையொன்றை தாபிப்பதற்கோ அல்லது

லொத்தர் சீட்டிழுப்பு கணனி முறைமையை வடிவமைப்பதற்கோ 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் சபைக்கு முடியாதிருந்தது.

(ஐ) சபைக்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்று முன்னாள் தலைவரின் ஆலோசனையின்படி 2012 பெப்ரவரி மாதம் முதல் 2014 நவம்பர் மாதம் வரை அரசியல் விழாக்கள் மற்றும் கூட்டங்களுக்காக சபைக்கு வெளியேயுள்ள நபர்களுடன் பிரயாணம் செய்யப்பட்டிருந்தமை விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதாக பதியப்பட்டு தலைவரின் ஆலோசனையின்படி சபையின் அந்தரங்கச் செயலாளர் மற்றும் மேலும் இரண்டு உத்தியோகத்தர்களின் மூலம் ஓட்டப்பதிவு கையொப்பமிடப்பட்டதாக ஜீப் வண்டியின் சாரதியினால் கணக்காய்விற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் மேற்கூறப்பட்ட பிரகாரம் கொழும்பிலிருந்து வெளியே ஓட்டத்தில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களின் போது தமது மேலதிக நேரப் படி பெற்றுக்கொள்வதற்காக விற்பனை மேம்படுத்தல் கடமைகளுக்காக பங்குபற்றிய சாரதியினால் பிழையான தகவல்களை உள்ளடக்கிய கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் சபையின் பிரதி பொது முகாமையாளரினால் (விற்பனை), அந்தக் கடிதம் சிபாரிசு செய்யப்பட்டு சாரதிக்கு ரூபா 249,750 தொகையான படியைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன்படி மேற்கூறப்பட்ட கால எல்லையில் சபையின் வெளிப்பட்ட தேவைகளுக்காக ஜீப் வண்டியை ஓட்டத்தில் ஈடுபடுத்திய சாரதிக்கு சம்பளம், படிகள் மற்றும் எரிபொருளுக்காக சபையினால் ரூபா 3,170,017 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 38,752,448 தொகை செலவில் லொத்தர் சீட்டிழுப்பை ஒலிப்பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளுக்காக கலையரங்கமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கலையரங்கம் லொத்தர் சீட்டிழுப்பினை ஒலிப்பதிவு செய்யும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் கலையரங்கத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாக ஆய்வு செய்து ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் 2012 யூன் மாதத்தின் போது வழங்கப்பட்ட சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. சபைக்குச் சொந்தமான கலையரங்கம் பயன்படுத்தப்படாமல் லொத்தர் சீட்டிழுப்புக்கள் தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் ஒலிப்பதிவு செய்யப்படுகின்ற காரணத்தால் மீளாய்வாண்டின் போது ரூபா 35,800,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 4 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான காலம் முதல் விநியோகிக்கப்படாமல் காணப்படுகின்ற 14 மேம்படுத்தல் பொருள் வகைகளுக்குரிய ரூபா 1,801,310 தொகையான 616 பொருள் அலகுகள் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

மீளாய்வாண்டின் நவம்பர் மாதத்தில் சபையினால் ரூபா 20,850,000 தொகை (வரி தவிர்த்து விலை) செலவில் 06 லொத்தர் சீட்டுக்களுக்குரிய 600,000 போஸ்டர்கள் மற்றும் 3,000 பெனர்கள் பயன்படுத்தப்பட்டு விளம்பர நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டதாக சபையின் விற்பனைப் பிரிவின் ஆவணங்களின் படி உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் சபையின் பாதுகாப்பு பிரிவின் அறிக்கை மற்றும் கூற்றுக்களின் படியும் மற்றும் சபையின் களஞ்சிய பொறுப்பாளரினதும் களஞ்சிய உதவியாளரினதும் கூற்றுக்களின்படியும் 60,000 போஸ்டர்களும் 60 பெனர்களும் மாத்திரம் களஞ்சியத்திற்குக் கிடைத்தாக எழுத்துமூல கூற்றுக்களின் பிரகாரம் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டது. உள்ளபடியாக சபைக்குக் கிடைத்த 60,000 போஸ்டர்களும் 60 பெனர்களுக்காகவும் முறையே ரூபா 1,260,000 மற்றும் ரூபா 165,000 தொகைகளாக ரூபா 1,425,000 கூட்டுத்தொகை 03 விளம்பர

நிறுவனங்களுக்குச் செலுத்தவேண்டிய போதிலும், 600,000 போஸ்டர்களும் 3,000 பெனர்களும் சபைக்குக் கிடைத்து அதன் மூலம் விளம்பர செயற்பாடுகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதாக விற்பனைப் பிரிவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு சபையினால் ரூபா 20,850,000 தொகை செலுத்தப்பட்டமையால் சபைக்கு ரூபா 19,425,000 தொகையான நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது.

**4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

சபையினால் தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 1,295,000 தொகை செலுத்தி மதியுரைச் சேவை பெறப்பட்டு ISO 9001: 2008 இற்கு இணக்கத்தைக் காண்பிக்கும் தரமான முகாமைத்துவ முறைமையொன்றுக்கான (certificates of quality management system) தரச் சான்றிதழ் ஒன்று மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்த போதிலும் சபையின் உத்தியோகத்தர்கள் தமது பணிகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றும் போது தரக் கைநூல் (quality Manual) மற்றும் தர வழிகாட்டி (quality procedures) பின்பற்றப்படாமையினால் இது சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**4.7 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 201 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவிணயினர் 225 ஆக இருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் வெற்றிடங்கள் 15 ஆகக் காணப்பட்டதுடன் மிகைகளின் எண்ணிக்கை 39 ஆகும்.

(ஆ) 2009 நவம்பர் 17 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ/04/4/015 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடிதம் மற்றும் 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின்படி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 12 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

**4.8 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் படி சபைக்குச் சொந்தமான வளங்கள் (மனித வங்களும் உள்ளடங்கலாக) வரிசை அமைச்சிற்கோ அல்லது ஏனைய அரசாங்க நிறுவனமொன்றின் பயன்பாட்டிற்கோ ஈடுபடுத்த முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கு 2010 ஆகஸ்ட் 13 முதல் வெளி நிறுவனமொன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார். உரிய காலப்பகுதியில் சபைக்கு எவ்வித சேவையொன்றையும் பெற்றுக்கொள்ளாமல் அந்த உத்தியோகத்தருக்கு 2010 ஆகஸ்ட் முதல் 2014 திசெம்பர் வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,228,435 தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை சபைக்காக பிரத்தியோக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் மாதாந்தம் ரூபா 70,000 கட்டணமொன்று செலுத்தி மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதம் வரை தனியார் கணக்காய்வுக் கம்பனியொன்றின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**5.2 கொள்வனவுத் திட்டம்**

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் படி கொள்வனவு நிறுவனத்தின் மூலம் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் சகல கொள்வனவுகளும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

07 செலவின விடயங்களிலும் ஏனைய வருமான விடயத்திலும் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கிடையே 6 சதவீதம் முதல் 209 சதவீதத்திற்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) மனிதவள முகாமைத்துவம்
(இ) சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) செலவின முகாமைத்துவம்
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு